செ.வெ.எண்: 03/ஜூலை நாள் : 02.07.2016

## இராமநாதபுரம் மாவட்டம்

## கீழக்கரையில் உள்ள முஸ்லிம் ஜமாத் சார்பாக நடைபெற்ற மதநல்லிணக்க இப்தார் நோன்பு திறப்பு நிகழ்ச்சியில்

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச. நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார்.

இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை வடக்குத்தெருவிலுள்ள முஸ்லிம் ஜமாத்தில் 01.07.2016 அன்று மாலை நடைபெற்ற மதநல்லிணக்க இப்தார் நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டனர்.

ரம்ஜான் பண்டிகை முஸ்லிம் மக்களின் மிக முக்கிய பண்டிகையாக விளங்கி வருகிறது. தமிழகத்தில் (ஜுன்) கடந்த மாதம் 7-ந்தேதி முதல் ரம்ஜான் நோன்பு துவங்கியது. இதையடுத்து ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள முக்கிய ஊர்களில் முஸ்லிம் மக்கள் அனைத்து சமுதாய மக்களையும் அழைத்து மதநல்லிணக்க இப்தார் நோன்பு திறப்பு நிகழ்ச்சியை நடத்தி சகோதரத்துவத்தை வெளிப்படுத்தி வருகின்றனர்.

கீழக்கரை வடக்குத் தெருவில் உள்ள முஸ்லிம் ஜமாத் சார்பாக நேற்று (01.07.2016) மாலை 25-வது மதநல்லிணக்க இப்தார் நோன்பு திறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச. நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார். ஜமாத் தலைவர் திரு.அக்பர் கான் அவர்கள் வரவேற்றார். பள்ளிவாசல் மதகுரு திரு.சாகுல் ஹமீது அவர்கள் ரம்ஜான் நோன்பின் சிறப்புகளை விளக்கி கூறினார்.

இந்நிகழ்ச்சியில் இராமநாதபுரம் வருவாய் கோட்டாச்சியர் திரு.இரா.ராம்பிரதீபன், கீழக்கரை நகர் மன்றத் தலைவர் திருமதி.ராவியத்துல் கதரியா அமீர் ரிஸ்வான், கீழக்கரை வட்டாட்சியர் திரு.தர்மன், கீழக்கரை வட்ட வழங்கல் அலுவலர் திரு.தமீம் ராஜா, முன்னாள் ஜமாத் தலைவர் திரு.ரத்தின முகம்மது, ஜமாத் செயலாளர் திரு.எம்.எம்.எஸ்.முகைதீன் திரு.இபுராகிம், நிர்வாகக் குழு உறுப்பினர்கள் திரு.நிசார், திரு.ஜகுபர் அலி, நகர் மன்ற உறுப்பினர் திரு.முகைதீன் இபுராகிம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.